// தேர்வுகள் // // அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 9200/ஆ5/2020 நாள் 12-03-2020

பொருள் தேர்வுகள் – ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம்– இடைநிலை கல்வி விடுப்புச் சான்றிதழ் பொது தேர்வு மார்ச், ஏப்ரல் 2020 – வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், தொடர்பு அலுவலர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள், மற்றும் வழித்தட அலுவலர்களுக்கான ஆயத்த கூட்டம் கீழ்க்கண்ட பட்டியலின் படி நடைபெறுதல் – சார்பு.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடித ந.க எண் 124817/ பி2/2020 நாள் 27-02-2020

••••••

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள்இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி மார்ச் ஏப்ரல் 2020ல் நடைபெறவுள்ள இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுகள் தொடர்பான ஆயத்தக்கூட்டம் கீழ்க்காணும் அட்டவணையின்படி நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், தொடர்பு அலுவலர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள் , துறை அலுவலர்கள், மற்றும் வழித்தட அலுவலர்களுக்கான கூட்டத்தில் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இத்தகவலினை சார்ந்தவர்களுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கவும் மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | கல்வி மாவட்டம் | கூட்டம் நடைபெறும் நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் | கூட்டம் நடைபெறும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி | காலை 10.00 மணி | அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி வேலூர் | 17-03-2020 |
| 2 | அரக்கோணம் மற்றும் இராணிப்பேட்டை | நன்பகல் 12.30 மணி | | |
| 3 | வேலூர் | மாலை 04.00 மணி | | |

மேலும் கீழ்க்காணும் அட்டவணையின்படி SSLC தேர்வு பணிகள் மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Scanned with CamScanner

| வ. எண் | நாள் | விவரம் |
|---|---|---|
| 1 | 18-03-2020 | வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் தேர்வு மையம் வாரியாக வினாத்தாள் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் |
| 2 | 19-03-2020 | தேர்வு மையங்களுக்குரிய அறைக் கண்காணிப்பாளர்களை மாவட்டக் கல்வி அலுவலர்கள் முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட வேண்டும். |
| 3 | 21-03-2020 | தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் காலை 10.00 மணிக்கு தேர்வு மைய பொறுப்பினை ஏற்க வேண்டும் |
| 4 | 21-03-2020 | மாவட்டக் கல்வி அலுவலர்கள் தலைமையில் பறக்கும் படை உறுப்பினர்களுக்கான கூட்டம் நடத்தி அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும். |
| 5 | 23-03-2020 | தேர்வு மையத்தில் முதன்மைக் கண்காணிப்பாளர் தலைமையில் அறைக் கண்காணிப்பாளர்களுக்கான கூட்டம் மதியம் 02.00 மணிக்கு நடத்தப்பட வேண்டும் (Previsit) |

மேலும் 16–03–2020றகுள் தங்கள் கல்வி மாவட்டத்திலுள்ள தேர்வு மையங்களின் விவரங்கள், மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள், வினாத்தாள் கட்டுக்காப்பு மையம் மற்றும் வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் விவரம், தொடர்பு அலுவலர்கள் விவரம், வழித்தட அலுவலர்கள் விவரம், தேர்வு மையத்தில் பணிபுரியவுள்ள முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறைஅலுவலர்கள் பெயர் , பதவி, பணிபுரியும் பள்ளி மற்றும் அலைபேசி எண்ணுடன் புத்தக வடிவிலும் மற்றும் Email மூலம் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

13.03.20

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

13.3.2020

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்
திருப்பத்தூர் / வேலூர் / அரக்கோணம் / இராணிப்பேட்டை / வாணியம்பாடி

நகல்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்
திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

Scanned with CamScanner